இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 13-02-2025

# நில உரிமையை நிலைநாட்டும் ஆட்சி

**ஆறு மாத காலத்துக்குள் 6 இலட்சத்து 29 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.**

சென்னையைச் சுற்றி இருக்கக் கூடிய நான்கு மாவட்டத்து 'பெல்ட் ஏரியா' பகுதிகளில் இருக்கக் கூடிய 32 கிலோ மீட்டரில் நெடுங்காலமாக பட்டா இல்லாமல் குடியிருப்பவர்களுக்கு நன்மை செய்யும் திட்டம் இது. சென்னையில் மட்டும் 29 ஆயிரத்து 187 பேர் ஆட்சேபனையற்ற புறம்போக்குப் பகுதியில் குடியிருக்கிறார்கள். இவர்களுக்கு பட்டா வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். 1962 முதல் இருந்த இந்தப் பிரச்சினைக்கு தி.மு.க. அரசு தீர்வு கண்டுள்ளது. இதேபோல் மதுரை, நெல்லை மாவட்டங்களில் 57 ஆயிரத்து 54 பேருக்கு பட்டா வழங்க வேண்டி உள்ளது. மொத்தம் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்கும் முடிவை தமிழ்நாடு அமைச்சரவை எடுத்துள்ளது.

**"இதுவரை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தபிறகு 10 லட்சத்து 26 ஆயிரம் பேருக்கு நாங்கள் பட்டா வழங்கி இருக்கிறோம்."** என்று வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சொல்லி இருக்கிறார்.

1962 தேர்தல் அறிக்கையில், **"அரசியலில் ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு - பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வற்ற சமத்துவ நிலை - எல்லோருக்கும் நல்வாழ்வு கிடைத்திட சமதர்மம் - சமூகத்துறையில் பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சியும் பேதமற்ற சமூக அமைப்பும் ஏற்படுத்துதல்"** ஆகிய கொள்கைகளை தி.மு.க. வரையறுத்தது. இந்த அளவுகோலை செயல்படுத்தவே கழகம், ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்தி வருகிறது.

1971 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாக 'குடியிருப்போருக்கு மனை சொந்தம்' என்ற சட்டத்தை முதலமைச்சர் கலைஞர் கொண்டு வந்தார். 'தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்கல்) சட்டம்' என்று இதற்குப் பெயர். விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் வீட்டு மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட்டன. இதன் மூலமாக குடியிருப்பு மனை பெற்றவர்கள் 1 லட்சத்து 75 ஆயிரம் பேர். இதில் பட்டியலினத்தவர்கள் 1 இலட்சத்து 2 ஆயிரத்து 404 பேர். பிற்படுத்தப்பட்டவர்கள் - 40 ஆயிரத்து 550 பேர்.

நிலமற்ற ஏழைகளுக்கு இலவசமாக விவசாய நிலம் ஒப்படை செய்யும் திட்டத்தின் கீழ் 1996 - 2000 ஆகிய ஆண்டுகளில் 35,696 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் 52,792 பேருக்கு வழங்கியதும் கழக ஆட்சியே.

அரசு புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து வரும் மக்களின் இடங்களை வரைமுறைப்படுத்த ஒரு சிறப்புத் திட்டம் 2006 தி.மு.க. அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. பத்து ஆண்டுகள் என்பதை ஐந்து ஆண்டுகள் என 2008ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டுக்குள் மூன்று லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் கட்டளையிட்டார். இதன்படி கிராமப்புற மக்களுக்கான ஆண்டு வருமானம் 30 ஆயிரம் எனவும், நகர்ப்புற மக்களுக்கான ஆண்டு வருமானம் 50 ஆயிரம் எனவும் குறிக்கப்பட்டது. கிராமப்பகுதியில் 4 சென்ட், நகராட்சியில் இரண்டரை சென்ட், மாநகராட்சியில் 2 சென்ட் வழங்கப்பட்டது. 2006-09 காலக்கட்டத்தில் மட்டும் 6.70 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இதில் ஆதிதிராவிடர் 1,74,952 பேர். பழங்குடியினர் 13,313 பேர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 1,96,520 பேர். பிற்படுத்தப்பட்டோர் 2,54,795 பேர். ஏனையோர் 30,473 பேர்.

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்குவோம் என்று தலைவர் கலைஞர் 2006 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அறிவித்தார்கள். ஆட்சி அமைந்ததும் இதற்காக 26.8.2006 அன்று மூன்று அரசாணைகளை முதல்வர் கலைஞர் வெளியிட்டார். எந்தவித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசுத் தரிசுப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல், நிலமற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்களை பண்படுத்துதல் - மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கமாகச் சொல்லப்பட்டன.

நிலம் வழங்கும் முறைகளை ஆராய மேற்கு வங்க மாநிலத்துக்கு அன்றைய வருவாய்த் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் குழு சென்றது. நிலங்கள் எப்படி பிரித்து தரப்படுகிறது என்பதை ஆய்வு செய்தது. அதன்படி தமிழ்நாட்டிலும் திட்டம் வகுக்கப்பட்டது.

17.9.2006 அன்று முதல்வர் கலைஞர் தந்தை பெரியாரின் பிறந்த நாளில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். **'தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பேரால் எத்தனையோ பணிகளை நான் தொடங்கி வைத்திருந்தாலும் இதுதான் எனக்கு நிறைவான பணி. எந்த சுயநலத்துக்காகவும் இதனை வழங்கவில்லை. இது உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக, வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காக தரப்பட்டுள்ளது.'** என்று கலைஞர் குறிப்பிட்டார். 2009 வரையில் 1,75,511 பேருக்கு 2,10,534.68 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.

இந்த வரிசையில் தான் இன்றைய முதலமைச்சர் அவர்களும் பட்டா வழங்கும் முடிவை எடுத்துள்ளார்கள். இதுவரை வழங்கப்பட்ட பட்டாக்கள் 10 லட்சத்து 26 ஆயிரம். இனி வழங்க இருப்பது 6 லட்சத்து 29 ஆயிரம். ஆக மொத்தம் 16 லட்சத்து 55 ஆயிரம் பேர் பட்டாக்களைப் பெற்றிருப்பார்கள். இது மாபெரும் சாதனையாகும். நில உரிமையை நிலைநாட்டும் சாதனை ஆகும்.

**'நீண்ட காலப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுள்ளது தமிழ்நாடு அரசு' என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். நீண்ட காலப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட்டுள்ளது.**

## இந்தியத் திரையுலகின் ஆற்றல்மிகு அடையாளம்!

# 'பாடும் நிலா' எஸ்.பி.பாலசுப்ரமணியம் திருவுருவப்படத்திற்கு துணை முதல்வர் மரியாதை - குடும்பத்தாருக்கு நினைவுப் பரிசு!

### நுங்கம்பாக்கம் - காம்தார் நகரில் - சாலையின் பெயரைத் திறந்து வைத்து இல்லம் சென்றார்!





**சென்னை, பிப். 13-**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, பெருநகர சென்னை மாநகராட்சி - நுங்கம்பாக்கம் - காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு புதிதாகப் பெயர் சூட்டப்பட்ட 'எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை' மின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து, எஸ்.பி.பி. அவர்களைப் பெருமைப்படுத்தினார்.**

இந்நிகழ்வைத் தொடர்ந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்திய திரையுலகின் ஆற்றல்மிகு அடையாளம். 40 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடிய 'பாடும் நிலா'. மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாரின் பெயரை, அவர் வாழ்ந்த நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள காம்தார் நகர் முதன்மைச் சாலைக்குச் சூட்ட வேண்டும் என்று அவருடைய குடும்பத்தார் - ரசிகர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.**

**அதனை நிறைவேற்றும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், காம்தார் நகர் முதன்மை சாலைக்கு 'எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை' என்று பெயர் சூட்ட உத்தரவிட்டார்கள்.**

**அதற்கான அரசாணை சமீபத்தில் வெளியிடப்பட்ட நிலையில், 'எஸ்.பி. பாலசுப்ரமணியம் சாலை'க்கான வழிகாட்டிப் பலகையை நுங்கம்பாக்கத்தில் இன்று திறந்து வைத்தோம்.**

**எஸ்.பி.பி.சாரின் திருவுருவப் படத்துக்கு மரியாதை செய்து, அவரின் குடும்பத்தாருக்கு நினைவுப் பரிசினை வழங்கினோம். காற்றில் கானமாக வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ்.பி.பி. சாரின் புகழ் ஓங்கட்டும்!**

இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் வலைதளப்பதிவில் பதிவிட்டிருந்தார்.

# நெடுஞ்சாலைத்துறை சாலைகளின் பராமரிப்புப் பணிகள்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, பிப்.13-

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கூட்டரங்கில், நெடுஞ்சாலைத் துறை சாலைகளின் பராமரிப்புப் பணிகள் தொடர்பாக, நேற்று (12.02.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் எ.வ.வேலு ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையின் அனைத்துக் கோட்டப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு ஆய்வுக்கூட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்த உரையில், நெடுஞ்சாலைகளின் பராமரிப்புப் பணிகளில் பொறியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், கடந்த நான்கு ஆண்டுகளில் பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகளை பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டும். சாலைகளின் இருபுறங்களில் உள்ள முட்புதர்கள் முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

சாலைகளின் இருபுறங்களிலும் மண் புருவங்கள் சரியாக அமைக்கப்பட வேண்டும். கிலோ மீட்டர் மற்றும் பர்லாங் கற்களுக்கு வர்ணம் பூச வேண்டும். அறிவிப்பு பலகைகள், சாலை உபகரணங்கள் மற்றும் இரும்பு தடுப்பான்கள் முதலியவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும், அதற்குத் தனிப்பதிவேடு பராமரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், அமைச்சர் எ.வ.வேலு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சாலைகளில் தேவையில்லாத இடங்களில் வேகத்தடை அமைக்க வேண்டாம் என்றும், தேவையானால் அதற்குரிய இடத்தில், எச்சரிக்கைப் பலகை அமைக்க வேண்டும். சாலை உபகரணங்கள் IRC வழிகாட்டுதலின்படி, தேவையான இடங்களில் மட்டும் வேகத்தடை அமைக்கப்பட வேண்டும். சாலைகளில் வெள்ளைக் கோடுகள் தரத்துடன் போடப்பட வேண்டும்.

நிலஎடுப்புப் பணிகளில் பொறியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக கண்காணிப்புப் பொறியாளர்கள், மாவட்ட ஆட்சியர்களைத் தொடர்புக் கொண்டு, நிலஎடுப்புப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும், 15.3.2025க்குள் மீண்டும் சாலைப் பாதுகாப்பு தணிக்கைச் செய்யப்பட வேண்டும் என்றும், இந்த ஆண்டு பொறியாளர்களுக்குச் சாலைப் பாதுகாப்பு தணிக்கைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கும்போது, ஆற்றின் அகலம், நீர் வெளியேற்றம், நீர்வரத்து, மழையின் அளவு, மண்ணின் தன்மை, பாலத்தின் நேர்பாடு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், பாலப்பணிகள் நடைபெறும் தளத்தில் களப்பணியாளர்கள் இல்லாமல் எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

பாலப்பணிகளை கவனிக்க, "பாலம் கண்காணிப்புக் குழுமம்" அலகு (Bridge Monitoring Committee Wing) என்கிற தனி அலகு உருவாக்கப்படவுள்ளது. அதற்கு விரைவில் அரசாணை பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்து, பணிகளின் நிலைக்குறித்து, இக்குழுமத்தின் மூலம் ஒப்புதல் பெறவேண்டும் என்று உத்தரவிட்டார்.

தேர்தல் அறிக்கையில், அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் முடிக்கப்பட்ட பணிகளை தவிர, இதர அறிவிப்புகளை 31.3.2025க்குள் விரைந்து முடிக்க வேண்டும். அனைத்து நிலஎடுப்பு பணிகளையும் துரிதப்படுத்த வேண்டும். பிற துறைகளினால் சாலைப் பணிகள் காலதாமதம் ஏற்பட்டால் உடனடியாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சி.ஆர்.ஐ.டி.பி. 2024 2025இல் திட்ட பணிகளுக்கான பிரேரணைகள் தயாரிக்கும்போது, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களின் தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதனை தலைமைப் பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அமைச்சர் எ.வ.வேலு உரையைத் தொடர்ந்து ஒவ்வொரு திட்டமாக ஆய்வு செய்து, பொறியாளர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் ஆர்.செல்வராஜ், திட்ட இயக்குநர் D.பாஸ்கர பாண்டியன், முதன்மை இயக்குநர் ஆர்.செல்வத்துரை, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் எம்.சரவணன், தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கே.ஜி.சத்திய பிரகாஷ், தலைமைப் பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு) திருமதி.எஸ். உஷாதேவி, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா. சந்திரசேகர், கோட்ட பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில் நேற்று (12.02.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நெடுஞ்சாலைத் துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு பணிகள் குறித்து பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், முதன்மை இயக்குநர் ஆர்.செல்வத்துரை, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கே.ஜி.சத்தியபிரகாஷ், சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

### மின்னணு வாக்குப்பதிவு : பதிவுகளை அழிக்கக் கூடாது!

**உச்ச நீதிமன்றம் உத்தரவு**

புதுடெல்லி, பிப்.13-

ஏ.சி.ஆர் என்ற தனியார் தேர்தல் கண்காணிப்பு குழு மற்றும் சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அமர்வில் விசாரணைக்கு வந்த போது பிறப்பித்த உத்தரவில், தற்போதைக்கு எந்த ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் இருந்தும் எந்த ஒரு தரவுகளையும் அகற்ற வேண்டாம் என இந்திய தலைமை தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவு பிறப்பித்தனர். மேலும் அந்த தரவுகளை அகற்றுவதில் எத்தகைய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது என்பது குறித்த விவரங்களை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.